**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**39 |
| Name | : | **அசோகன் (உதவி ஆய்வாளர்)** |
| Father's / Husband Name | : | முத்து |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 57/2025 |

**தேதி : 22.10.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.G. லோகநாதன் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வி.களத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.07.2024 அன்று பெரம்பலூர் மாவட்ட குற்ற பிரிவில் உதவி ஆய்வாளராக அலுவலில் இருந்தபோது செட்டிக்குளம், மலையடிவாரம் முகவரியில் வசித்து வரும் வினோத்கண்ணன் மனைவி சத்தியா என்பவர் பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் மனு சி நம்பர் 1007, S.P.DPO பெரம்பலூர் 26.07.2024 என்ற மனுவை பெற்று மாவட்ட குற்றப்பிரிவு மனு எண். C நம்பர் 327/DCB/பெரம்பலூர் கொடுத்து பெரம்பலூர் மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண். 6/2024 சட்டப்பிரிவுகள் 406, 417, 420 இதசவின்படி புகாரின்தன்மைக்கேற்ப வழக்கு பதிவு செய்யப்பட்டது. **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 56 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1 க்கு அனுப்பினோம். மேல் விசாரணைக்காக வழக்கு

கோப்பை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

என்னிடம் புகார் 27.07.2024ம் தேதி தபாலில் கிடைத்தது என்றால் சரிதான். நான் பெற்ற புகாரில் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். எனக்கு மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களால் புகார் பரிந்துரைக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் இருந்து இந்த புகாரை தவிர வேறு எந்த புகாரும் அனுப்பப்படவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த தேதி 2014 முதல் என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரரை வழக்கு பதிவு செய்வதற்கு முன்பாக நான் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் நபர்கள் என்னிடம் எவ்விதமான புகாரும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். புகாரில் புகார்தாரர் அவர் மீது கொண்ட நம்பிக்கையின் பேரில் கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

அதேபோல் இவ்வழக்கின் புகார்தாரர் எனக்கும், எதிரி வசந்திக்கும் தனியார் நிறுவனங்களில் கடன் வாங்கும் வகையில் பழக்கம் ஏற்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளாமல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை எந்த உண்மையும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.